2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மானியத்தோடு மாட்டுத் தீவனங்களை முறையாக வழங்கிக்கொண்டிருக்கின்றோம். எந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் வழங்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பாரேயானால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

207—

நிலத்தடி நீர்

***5303—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் உள்ள கிராமங்களின் நிலத்தடி நீரில் கந்தகப் பொருட்கள் கலப்பதைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில், நிலத்தடி நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டதில் கந்தகப் பொருட்களின் கலப்படம் இல்லையெனத் தெரிய வருகிறது. இருந்தாலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, கடலை ஒட்டிய தொகுதி. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் காரணமாக கடற்கரையிலிருந்து கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் கடல் நீர் உள்ளே வந்து உப்பு நீர் கலந்து, குடி தண்ணீரும், நிலத்தடி நீரும் பாதிக்கப்பட்டுவிட்டது. வீட்டு உபயோகத்திற்கு மின் மோட்டார்மூலம் தண்ணீர் எடுத்தால்கூட, அழுகிய முட்டை வாடை வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்களுடைய மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் அவர்கள் உரிய முறையிலே ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கந்தகம் கலந்திருக்கிறது என்று பொதுமக்களும், விவசாயிகளும் சொல்கிறார்கள். உரிய ஆய்வினைச் செய்து நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்கள் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளாகும். சீர்காழி சட்டமன்றத் தொகுதியிலுள்ள மாதானம், வேட்டங்குடி, எடமணல், வருசபத்து, தேவரோடை ஆகிய ஐந்து கிராமங்களில் நிலத்தடி நீர் சேகரிக்கப்பட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகப்பட்டினம் அலுவலகத்திலிருந்து அதற்கான பகுப்பாய்வு செய்யப்பட்டதில், Sulphate ஏற்றுக்கொள்ளப்பட்ட வரம்பிற்குக் கீழும், 200 milligram per litre; அதேபோல Sulphide மற்றும் Sulphite ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்ட வரம்பிற்குக் கீழும் உள்ளன என்பதாகத் தகவல்கள் தெரியவருகின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கேள்வியானது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்கிற அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தப் பணிகளையெல்லாம் மேற்கொள்வதற்காகத்தான், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் 'காலநிலை மாற்ற இயக்கம்'

2022 ஏப்ரல் 29]

என்கின்ற ஓர் இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்காக 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டு 75.5 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்கின்ற நல்ல தகவலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதனுடைய பணிகள் குறிப்பாக, 14 மாவட்டங்களில், 500 கிலோ மீட்டர் பரப்பளவில் கடற்கரை பகுதிகளைப் பசுமை நிறைந்த பகுதிகளாக மாற்றவுள்ளோம். குறிப்பாக, நீங்கள் சொல்லியிருக்கின்ற நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் கடலூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் உடனடியாக ஒரு சிறப்பு வல்லுநர் குழுவை அமைத்து, நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, சுனாமி காலத்தில் கடல் நீர் நிலத்திற்குள் புகுந்ததால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் சொல்லியிருக்கிறார்கள். அதையும் கவனத்தில்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறிப்பாக கடல் நீர் நிலத்தில் உட்புகாமல் இருப்பதற்குக் காரணம், நிலத்தடி நீரினுடைய அடர்த்தியைவிட கடல் நீரின் அடர்த்தியானது அதிகமாக இருக்கும். அதை நிலத்திற்குள்ளே செல்லவிடாமல் தடுக்கிறது.

முற்பகல் 10–50

அதோடு இன்னொரு விஷயம் என்னவென்றால், கடற்கரையோரம் இருக்கின்ற அந்த ஈர நிலம் (wet land), *அதுதான் கடல் நீர் உள்ளே புக முடியாத நிலையில் இருக்கின்றது என்கிற கூடுதல் தகவலோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, எதிர்காலத்திற்கு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த கருத்தாக உள்ளதால், அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை உள்வாங்கி அதற்குத் தகுந்த பதில் கொடுத்தால், கேள்வி நேரத்தில் போதுமானதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு, டெல்டா மாவட்டத்தைப் பெட்ரோலிய மண்டலமாக அறிவித்திருந்தாலும்கூட, முன்னாள் மாண்புமிகு*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்டா மாவட்டத்தைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது, நீங்கள் பேசலாம்.*

திரு. மு. பன்னீர்செல்வம்: ONGC *மூலமாக செயல்படுத்தக்கூடிய* hydrocarbon *திட்டம்,* methane *திட்டம் இவற்றையெல்லாம் தடுக்கும்விதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் வைத்துத்தான் மக்கள் சந்தேகப்படுகிறார்கள். எனவே, வருங்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், உப்பு நீர் உட்புகுவதைத் தடுக்கும்வண்ணம் நடவடிக்கைகளை எடுத்து* resistivity survey *என்று சொல்கிறார்கள், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்டமானது, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றப் பிறகு,* hydrocarbon *போன்ற, மண்ணை மலடாக்கக்கூடிய அபாயகரமான எந்தத் திட்டத்திற்கும் அனுமதி வழங்கக் கூடாது என்று முடிவெடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற கடல் நீர் நிலத்தில் உட்புகாதவாறு எதிர்காலத்தில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

2022 ஏப்ரல் 29]

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், மயிலாடுதுறை, சென்னை போன்ற கடற்கரையோர மாவட்டங்களில் புவி வேகமாக வெப்பமடைகின்ற காரணத்தினால், பனிப்பாறைகள் உருகி கடல் நீர் 1½ அடிக்கு மேல் வருகின்றது என்றும், இன்னும் 20 ஆண்டுகளில் கடற்கரையோர மாவட்டங்களில் கடல் நீர் முழுவதுமாக உள்ளே புகுந்து, குடிநீருக்குப் பேராபத்து ஏற்படும் என்றும், அண்ணாமலை பல்கலைக்கழகம் ஒரு* research *செய்து வெளியிட்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி விரிவான திட்டங்கள் ஏதாவது மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலநிலை மாற்றத்திற்கான பன்னாட்டு அரசுகளுக்கான குழு அறிக்கை ஒன்றை 4—4—2022 அன்று தந்திருக்கிறது. தற்போது இருக்கிற வெப்ப நிலை, சராசரி வெப்பத்தைவிட 1.2* degree celsius *உயர்ந்திருக்கிறது. இது 2032—ல் 1.5* degree celsius *அளவுக்கு உயரும் என்கின்ற அந்த எச்சரிக்கையையும் தந்திருக்கிறது. இதைத் தடுக்க வேண்டிய மிக மிக முக்கியப் பணி இருக்கிறது என்கின்ற அடிப்படையில்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு பெயர் மாற்றத்தைச் செய்திருக்கின்றார்கள். அதற்காக துறை மூன்று விதமான பணிகளை மேற்கொள்ள இருக்கிறது. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியதைப்போல, குறிப்பாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்துவது, எதிர்காலத்தில் எரிபொருள் கிடைக்குமா என்கின்ற அடிப்படையில்* Green hydrogen *என்கின்ற புதிய எரிபொருளைப் பயன்படுத்துவதற்கான திட்டங்களைத் தருவதாக அறிவித்திருக்கின்றார்.*

அதேபோல் தமிழ்நாடு முழுவதையும் 23.71 சதவிகிதம் என்கின்ற வனப்பரப்பை 33 சதவிகிதமாக உயர்த்துவதற்கான தொலைநோக்குத் திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் மூலமாக எதிர்காலத்தில் carbon*—னுடைய அளவைக்*

குறைத்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு, மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

208—

தொழிற்பயிற்சி நிலையம்

***13757—திரு. மு. பாபு:**

மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். செய்யூர் சட்டமன்றத் தொகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பாபு அவர்கள் புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். தற்போது செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.

திரு. மு. பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் நலன்மீது மிகுந்த அக்கறைகொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அரசு, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையில் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்திருப்பதை மனதார வரவேற்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. ஒன்று செங்கல்பட்டில் உள்ளது, 580 இடங்கள்